DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**eposition of LW12 examined as PW8** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | பிரபாகர் (HC 1475) |
| Father's/Husband's Name | பத்மநாபன் |
| Village | கரூர், தாந்தோணிமலை |
| Taluk | |
| Age | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

(A1, A2 called absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம், தாந்தோணிமலையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2023 ம் தேதி குடிமைபொருள் வழங்கல் பிரிவு நாகப்பட்டினம் அலகில் தலைமை காவலராக பணியில் இருந்த போது SI மணிகண்டன் மற்றும் தலைமை காவலர் மோகன்ராஜ் ஆகியோர்களுடன் நானும் சேர்ந்து குற்ற எண். 8/2023 என்ற வழக்கில் சம்பந்தபட்ட எதிரி சத்தியசீலனை கைது செய்வதற்காக உதவி ஆய்வாளருக்கு வந்த ரகசிய தகவலின் அடிப்படையில் நாகப்பட்டினம் பேருந்து நிலையம் பாட்டி மெஸ் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை பிடித்து உதவி ஆய்வாளர் விசாரிக்க மயிலாடுதுறை மாவட்டம் கஞ்சாநகரம் அருகே மோகன்தாஸ் என்பவருக்கு சொந்தமான இடத்தில் உள்ள கீற்று கொட்டகையில் சுமார் 15500 கிலோ பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரேசன் அரிசியை பதுக்கி வைத்திருந்ததாகவும் அதற்காக டாடா ஏசி வாகனம் பயன்படுத்தப்பட்டதாக ஒத்து கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருக்க பொதுமக்கள் யாரும் முன்வராத நிலையில் எனது மற்றும் தலைமை காவலர் மோகன்ராஜ் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையது தான். **(கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் எதிரியை கைது செய்வதற்கு நானும், தலைமை காவலர் மோகன்ராஜ் என்பவரும் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

P. Bal HC1475

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து டைப் செய்யப்பட்டது என்றால் நினைவில்லை. எதிரி அழைத்து செல்லப்பட்டு என் முன்னிலையில் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் உதவி ஆய்வாளர் எடுத்து வந்த பொலிரோ வாகனத்தில் சென்றோம். ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து எதிரிக்கு எதிராக போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் எங்கள் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருந்தால் அதன் அடிப்படையில் உடனடியாக வழக்கு தடய பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு கைப்பற்றாததிலிருந்தே எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எங்கள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், அவ்வாறு கைது செய்யப்பட்டதாக வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.

மறுவிசாரணை: இல்லை